## செய்முறைத் தாள்

இந்த சர்வேயில் பங்கேற்பதற்கு நன்றி. இந்த சர்வேயின் மூலம் வார்டு எண். 173ன் வீடுகள்/ கடைகளில் உருவாக்கப்படும் குப்பையின் அளவையும் கலவையையும் குறித்த விவரங்களை அறிந்து, அதன் அடிப்படையில் இணைந்த, நீடித்தத் திடக் கழிவு நிர்வாகத்தை உருவாக்குவதற்காக ஒரு முழுமையானத் திட்ட அறிக்கை வடிவமைக்க இருக்கிறோம். இந்தத் திட்ட அறிக்கை வார்டு எண். 173ல் வசிக்கும் குடிமக்கள் முன் வைக்கப்பட்டு, அவர்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் உட்படுத்தப்பட்டப் பிறகு சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படும். திடக் கழிவு நிர்வாகத்தில் அனுபவமிக்க நிபுணர்களும் இந்தத் திட்ட அறிக்கை, திறனுடைய, நடைமுறைப்படுத்தக் கூடிய ஒன்றாக இருக்கிறதா என்று கணிப்பார்கள். நமது நகரத்தில் குப்பை நிர்வகிக்கப்படும் முறையில் உண்மையான மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையில் எடுக்கும் இந்த முயற்சியில் இப்பொழுது நீங்களும் ஒரு மிக முக்கியமான பங்காளி!

இந்த முயற்சிக்குத் தேவையான அடிப்படை விவரங்களை கண்டறிய அடுத்த 9 நாட்களில் நீங்கள் சில காரியங்களை செய்து எங்களுக்கு உதவ வேண்டும்.

### நாங்கள் உங்களுக்கு கொடுக்க இருக்கும் பொருட்கள்:





| | | |
|---|---|---|
| 4 குப்பைத் தொட்டிகள் | குப்பையைப் பிரிக்கும் முறையை விளக்கும் ஒரு தகவல் தாள் | 36 குப்பை பைகள் |

### நீங்கள் செய்ய வேண்டியது:

1. குப்பைத் தொட்டிகளை கீழ்க்கண்ட முறையில் வையுங்கள்:
   - ஒரு பச்சை குப்பைத் தொட்டி மக்கக் கூடிய குப்பைகளுக்காக
     
   - மூடி உள்ள ஒரு சிறிய குப்பைத் தொட்டி சுகாதார கழிவிற்காக
     
   - இரண்டு சிகப்பு குப்பைத் தொட்டிகள் மக்காதக் குப்பைகளுக்காக
     

2. முதல் முறையாக குப்பை சேகரிக்கப்பட இருக்கிற நாளின் முந்தின நாள் இரவு ஒவ்வொரு குப்பைத் தொட்டியிலும் புதிய குப்பை பைகளை அமர்த்தவும். (இதை செய்தால் தான் நாங்கள் அதற்கு அடுத்த நாள் காலையில் குப்பை பைய்களை சேகரிக்க வரும் போது அவற்றுள் வெறும் ஒரு நாள் குப்பை மட்டும் இருக்கும்.)








3. குப்பை உருவாகும்போதெல்லாம் அதை தகுந்த குப்பைத் தொட்டியில் போடுங்கள்.

- பச்சை குப்பைத் தொட்டி, மக்கக் கூடிய கரிம பொருட்களுக்காக - காய்கறித் தொலி, வீணாய் போன உணவு, போன்றவை.



- சிகப்பு குப்பைத் தொட்டி மற்ற, மக்காதக் குப்பைகளுக்காக - பிளாஸ்டிக், உணவை பொதிக்க உபயோகப்படுத்தும் பிளாஸ்டிக், அலுமினியத் தாள், டப்பாக்கள், காகிதம், தேவையில்லாத உலோகப் பொருட்கள் போன்றக் குப்பைகளுக்காக



- மூடி உள்ள குப்பைத் தொட்டி சுகாதார கழிவிற்காக - குழந்தைகளின் டையப்பர், உபயோகித்த சுகாதார குட்டை(சானிடெரி நப்கின்), முடி, நெகத் துண்டுகள் போன்றவை.



எந்த குப்பைத் தொட்டியில் எத்தகைய குப்பையை போட வேண்டும் என்பதை விளக்கமாக அறிய கொடுக்கப்பட்டுள்ள குப்பை பிரித்தல் வழிமுறைத் தகவல் தாளை கவனமாக படியுங்கள்.

குறிப்புகள்:

1. நீங்கள் வழக்கமாக குப்பையில் தூக்கிப் போடுகிற பொருட்களை மட்டும் நாங்கள் கொடுக்கும் குப்பைத் தொட்டிகளில் போடவும். வழக்கமாக குப்பையில் போடாத பொருட்களை இந்த குப்பை தொட்டிகளில் போட வேண்டாம். உதாரணத்திற்கு, உங்கள் வீட்டில் செய்தித் தாளை வழக்கமாக குப்பையில் போடாமல் சேர்த்து வைக்கும் பழக்கம் இருந்தால் அந்தப் பழக்கத்தை தொடருங்கள்.

2. உங்கள் வீட்டுத் தோட்டத்தில் உருவாகும் குப்பையை நீங்கள் வழக்கமாக குப்பையில் கொட்டும் பழக்கம் இருந்தால் இப்போது தயவுசெய்து அதை சமையலறையில் இருக்கும் பச்சை குப்பைத் தொட்டியில் போடுங்கள்.

3. கூடுதலாக குப்பை பைகள் கொடுத்துள்ளோம்; ஒரு நாள் முடிவதற்குள் உங்களின் குப்பை பை நிரம்பிவிட்டால் கூடுதலாக கொடுக்கப்பட்டுள்ள பைகளை உபயோகிக்கவும்.

4. குப்பையில் போடுவதற்கு முன்பு உணவு பொருட்கள் வைக்கப்பட்டிருந்த குப்பிகள்/ டப்பாக்களை தயவுசெய்து கழுவவும். எங்கள் குழு இந்த குப்பையை கையாளுவார்கள் என்பதால் இந்தக் காரியத்தில் உங்கள் உதவி பாராட்டுதற்குரியதாய் அமையும்.

4. மறுநாள் விடியற்காலையில் குப்பை பையோடு சேர்த்து உங்களுக்குத் தரப்பட்டுள்ள நூலைக் கொண்டு ஒவ்வொரு குப்பை பையையும் கட்டி உங்கள் வீட்டு வாசலில் வையுங்கள். ஏற்கனவே குறிப்பிடப் பட்ட நேரத்தில் குப்பையை சேகரிக்க வருபவர்களிடம் கொடுத்துவிடுங்கள்.



5. குப்பைத் தொட்டிகளில் புதிய குப்பை பைகளை அமர்த்துங்கள்.

**நாங்கள் என்ன செய்வோம்:**

6. தொடர்ந்து ஒன்பது நாட்களுக்கு ஒவ்வொரு நாள் காலையிலும் குறிப்பிட்ட நேரத்தில் குப்பை பைகளை சேகரிப்போம். நாங்கள் வருவதற்கு முன்பே நீங்கள் வீட்டை விட்டு கிளம்பிவிட்டால் உங்கள் வீட்டு வாசலில் பைகளை வைத்துவிட்டு செல்லுங்கள். ஒவ்வொரு பைக்கும் அன்றையத் தேதி மற்றும் ஒரு குறியீடு கொண்ட அடையாள சீட்டு ஒட்டுவோம்.

7. நாங்கள் சேகரிக்கும் எல்லா குப்பை பைகளையும், ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட, பழையப் பொருட்களில் வியாபாரம் செய்யும் சந்தையோடு தொடர்புடைய ஒரு இடத்திற்கு எடுத்துச் சென்று, ஒவ்வொரு குப்பை பையையும் எடை போட்டு ஒவ்வொரு விதமான குப்பையின் மொத்த எடையை கண்டறிவோம். சுகாதாரக் குப்பைக் கொண்ட பைகளின் எடை நிர்ணயிக்கப்பட்டு அவை நகராட்சி குப்பைத் தொட்டிகளில் போடப்படும். மக்கக் கூடிய கரிம பொருட்கள் கொண்ட குப்பையின் கொள்ளளவு மற்றும் எடை நிர்ணயிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டப் பிறகு அது நகராட்சி குப்பைத் தொட்டியில் போடப்படும். சிகப்பு குப்பைத் தொட்டி மற்றும் வாழ்வறையில் வைக்கப்பட்டக் குப்பைத் தொட்டிகளின் மக்காதக் குப்பை தனித் தனியாக எடை செய்யப்பட்டப் பிறகு ஓரிடத்தில் காலி செய்யப்படும். குப்பை சேகரிப்பவர்கள் மற்றும் நிபுணர்களின் உதவி கொண்டு இந்த குப்பையை மேலும் மறுசுழற்சி செய்யக் கூடிய/ விற்கக் கூடிய பாகங்களாக பிரித்து, அவற்றை எடை போட்டு, அவற்றின் பண மதிப்பையும் பதிவு செய்வோம். விற்கப்படக் கூடியப் பொருட்கள் மறுசுழற்சிக்கென்று (எந்த கட்டணமும் இன்றி) கொடுக்கப்படும். மீதி குப்பை நகராட்சி குப்பைத் தொட்டிகளில் போடப்படும்.

8. இந்த முறையை தொடர்ந்து ஒன்பது நாட்களுக்கு பின்பற்றி உருவாகும் விவரங்களை பதிவு செய்வோம். இந்தத் தகவல் சென்னை மாநகாரட்சி செயல்படுத்தக்கூடிய ஒரு முழுமையான திடக் கழிவுத் திட்டத்தை தயாரிக்க உதவும்.


மேலும் விவரங்களுக்கு

ஹர்ஷா - 9566279084

அருணா- 9791769624